# மறுமலர்ச்சி

— மாத வெளியீடு —

## இந்த இதழில்


முகத்துவாரம்

காலப்போக்கில்

எங்கே காணலாம்?
— சோ. நடராஜன்

தமிழின் மறுமலர்ச்சி
— 'இலங்கையர்கோன்'

பழையதும் புதியதும்
— அ. செ. மு.

கிராமக்கவிதைகள்
— 'இரட்டையர்கள்'

சாங்கள் — நாவற்குழியூர் நடராஜன்

எலிக்குஞ்சுச் செட்டியார்
— 'வாத்தியார்'

இரண்டு ஊர்வலங்கள்
— 'சம்பந்தன்'

நண்டின் வாழ்க்கை நலம்
— பொ. கிருஷ்ணன்



பல்கலைப் புலவர்,
தமிழ்த் "கா.சு" நினைவு இலக்கியக் குடில்,
சுசுவரவடிவு அகம் - குழித்தலை.
திருச்சி மாவட்டம். 639 104


MARUMALARCHCHI
JAFFNA

30 சதம்

பார்த்திப - பங்குனி

# NEWTONS *for*

**The Latest in Furniture**
**Groceries & Confectionery**
**Toilet Requisities**
**Shoes & Slippers**
**Patent Medecines Etc.**

MAIN STREET, :: :: JAFFNA.

## உங்களுக்கு —

## — தேவையான

- வீடுகளை அலங்கரிக்கும் மரத் தளபாடங்கள்
- மருந்து வகைகள்
- நாவுக்கு இனிமையான உணவுவகைகள்
- சோப், பவுடர்
- சப்பாத்து, செருப்பு

முதலியவைகளுக்கு—

## " நியூற்றன்ஸ் "

பெரியதெரு, :: :: யாழ்ப்பாணம்.




தமிழ்ப் பூங்காவில் உள்ள மறுமலர்ச்சி இலக்கியச் செடியிலே இன்று ஒரு புதிய மலர் பூத்திருக்கிறது. தமிழன்பர்களின் இதயங்களுக்கு இந்த மலரைச் சமர்ப்பிக்கிறோம். இதயத்தைக் கவரும் மணத்தினாலும், அழகுமிக்க தோற்றத்தினாலும் அன்பர்களை இந்த மலர் திருப்திப்படுத்தும் என்று நம்புகிறோம்.

எழுத்தாளர்களும், ரஸிகர்களும் சேர்ந்து ஆரம்பித்த பத்திரிகை இது. இதனுடைய வளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சி. இதனுடைய இதயத் துடிப்பு தமிழ் இலக்கியந்தான்.

அரசியல், சமூக விஷயங்களைக் குத்திக் கிளறுவதற்காகவே ஒரு புதுமையான இலக்கியத்தை 'மறுமலர்ச்சி' சிருஷ்டிக்கப் போவதில்லை. ஆனால் இலக்கியத்தின் வளர்ச்சியிலே சமூகத்தின் வளர்ச்சி பின்னி வரும் என்பதை 'மறுமலர்ச்சி' நிரூபிக்கும்.

மிகவும் கஷ்டங்கள் நிறைந்த சமயத்தில் இந்த இதழ் வெளியாகிறது. அச்சுக்கூட வசதிகள், கடதாசி வசதிகள் — எதுவும் போதிய அளவுக்கு இல்லை. இப்போது அச்சிடப்படும் பிரதிகளைக்கொண்டு எல்லா அன்பர்களையும் திருப்திசெய்ய முடியுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. கூடிய விரைவில் இக்குறைகள் யாவும் நீங்கி, நிறைந்த பக்கங்களுடன், அநேக பிரதிகளை அச்சிடக்கூடிய நிலைமை வந்துவிடும். அதுவரை அன்பர்கள் மன்னிக்கவேண்டும்.

இந்த இதழில் எழுதிய எழுத்தாளர்களனைவரும் ஏற்கெனவே வாசகர்களின் பிரியத்தைக் கவர்ந்தவர்கள்தான். அவர்களை அறிமுகம் செய்யவேண்டிய தேவையே இல்லை.

நல்லது; வாருங்கள், உள்ளே போகலாம்!

# காலப் போக்கில்

## கல்வியின் கடமை.

**1945-ம்** ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கை மக்களுக்கு இலவசக் கல்வி கிடைக்க ஆரம்பித்தது. நாட்டின் கல்வித்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திவிட்டிருக்கும் இந்தக் கல்வி முறையிலே சீர்திருத்தங்களும், முன்னேற்றகரமான அம்சங்களும் பல உள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஏழைகளுக்கு அநேகமாய் ஓர் எட்டாத பாக்கியமாகவே இதுவரையும் இருந்து வந்த எண்ணும் எழுத்தும் ஆகிய கண்களை அவர்கள் அடையும்படி ஏற்பட்டிருக்கிறது.

இந்த இலவசக் கல்வி கடைசியில் தன்னை நம்பிய எல்லாரையுமே காப்பாற்றுமா என்பது தான் கேள்வி. அதாவது, மக்களின் வயிற்றுப் பிழைப்புக்கும் முடிவில் வழிவகைகள் காட்டிவிடுமா? படித்தவர்கள் தங்கள் சீவியத்தை ஓட்டுவது எப்படி என்றும் தெரிந்துகொள்ளக் கூடிய நிலைமை இதனால் ஏற்படுமா?

வாழ்க்கைக்கும் வழிகாட்டும் தொழிற்கல்வி நாட்டில் செழிப்படைந்த அன்றுதான் தேசம் பெருவாழ்வு வாழ முடியும் என்பதை நாம் ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டிருக்கிறோம். அறிவுப் பசியை மாத்திரம் தீர்த்துவிட்டால் கல்வியின் கடமையும் பொறுப்பும் தீர்ந்துவிடுவதில்லை. ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழிக்காத இந்த வயிற்று வளர்ப்புக்கும் அது வழி காட்டவேண்டும்.

## மழை விட்டும்......

"எனது இராஜ்யத்தின் எப்பகுதியிலேனும் எந்த இடமும், ஒரு வீட்டின் சிறு முற்றம்கூட மனிதனுக்குப் பயன் கொடாதிருக்கலாகாது" என்று சொன்னவன் மகாபராக்கிரமபாகு மன்னன். அப்படிப்பட்ட மன்னர்கள் ஒருகாலத்தில் அரசாட்சி செய்த இலங்கையில் இன்று உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. துறைமுகத்திலே அரிசிக் கப்பல் வருவதற்கு ஒரு நாள் தாமதமாகிவிட்டால், பொது மக்களுக்குக் கிடைக்கும் ஒரு படி அரிசி அரைப்படி அரிசியாகச் சுருங்கிவிடும் அந்தர நிலைமை வந்து நேர்ந்திருக்கிறது. காடு கெடுத்து நாடாக்கிப் பயிர் செய்யும் காரியத்திலே சேனநாயக்கா 'சைன்யம்' சென்ற வருஷங்களில் பணம் பணமாக வாரி இறைத்தும், 'உணவு உற்பத்தி

உணவு உற்பத்தி' என்று அகில இலங்கையிலும் கூச்சல் போட்டும் முடிவில் கண்ட பலன் என்ன? பயமுறுத்தலும், எச்சரிக்கையும் கைவிரிப்பும்தான். "எச்சரிக்கையாயிருங்கள் இனிமேல்தான் நாட்டில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்படவிருக்கிறது. நான் என்ன செய்வேன்" என்று விவசாய மந்திரி தெரிவித்து, கை விரித்துவிட்டார்.

அகில உலகத்தையுமே உணவுப்பஞ்சம் பீடித்துக்கொண்டு வருகிறது. இந்த நிலைமையில் ஒன்றின் கையை மற்றது எதிர்பார்ப்பது என்பது இனிமேல் முடியாத காரியம். யுத்தக் கொடுமைகளுக்கு ஒருமாதிரியாகத் தப்பிப் பிழைத்துவிட்ட இந்தச் சின்னஞ்சிறு தீவைப் பஞ்சப்பிணி என்ன பாடுபடுத்தி வைக்கப்போகிறதோ? இனிமேல் நம்மைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் — சேனநாயக்கா அல்ல!

## மதிப்பெடுப்பு.

'முதற் குடிசன மதிப்பு' எல்லாவிடங்களிலும் ஒருமாதிரி முடிந்துவிட்டது. இந்த 'மதிப்பெடுப்பு' எத்தனையோ தமிழ் உபாத்தியாயர்களுடைய 'மதிப்பை எடுத்து' விட்டதாகக் கேள்வி! யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு காரியம் நடந்தாலும் இந்தத் தமிழ் உபாத்தியாயர்கள் தானே தலையை நீட்டிக்கொண்டு முன் வருகிறார்கள்! சமீபத்தில் ஒரு உபாத்தியாய நண்பரைக் கண்டேன்.

"மதிப்பெடுப்பெல்லாம் எப்படி?" என்றேன்.

"அந்தத் தலையுடைப்பை ஏன் கேட்கிறீர்கள்? பட்டபாடு இந்த ஜன்மத்துக்குப் போதும், போதும்!"

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"அது சொல்லித் தொலையாது!...... நூறுதரம் விபரப் புத்தகத்தைப் படித்தாலும் ஒரு விபரமும் தெரியவில்லை. 'கவி பாடினவன் யாரோ; கருத்தெழுதியவன் யாரோ!' விபரங்களை ஆங்கிலத்தில் ஒருவர் எழுதினார். வேறு யாரோ ஒரு பிரகஸ்பதி தமிழாக்கினார். திண்டாடுவது நாங்கள்தான்!...... விதானையாருடைய முகத்துக்காகப் பார்க்கிறேன் இல்லாவிட்டால்......"

"சரி, சரி; ஏதோ இதுவும் ஒரு சமூகத் தொண்டுதான். நீங்கள் எல்லாம் கஷ்டப்படாவிட்டால் வேறுயார் பார்க்கிறது?" — என்று சொல்லிவிட்டு மெல்ல நடையைக் கட்டினேன்.

*கபீர் மனிதருள் ஒரு மனிதன்; மண்ணை நம்பி வாழ்ந்தவர். உலகையும் உடலையும் வீடு வாசலையும் சதமென்று நம்பாவிட்டாலும், அவற்றின் மூலந்தான் விடுதலையுண்டென்று கண்டவர். 'கோயிலிலல்ல, நீ இருக்கும் இல்லத்திலே கடவுளைக் காண்; அங்கே காணாத கடவுளை வேறு எங்கே சென்று காணப் போகிறாய்?' என்று கேட்பவர் அவர். அவருடைய அழகிய கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பு இது.*

# எங்கே காணலாம்?

*சோ. நடராஜன்.*

எங்கு போயெனைத் தேடினை? அன்பனே!
இங்கு பாருன்றன் பக்கத் திருக்கிறேன்;
அங்கு மிங்கு மலைந்திட வேண்டுமோ?
தங்கித் தேடு; சடுதியிற் காணுவாய்.

கோயி லென்றுங் குளமென்றும், பள்ளியின்
வாயி லென்றும் வகையறி யாதுநீ
போயலைந்து புறம்புறந் தேடினாய்!
மாய மில்லை; உன் பக்கத் திருக்கிறேன்.

கைலை யில்இலைக் காபாவி லில்லைநான்;
பயிலும் வேள்விகள் பூசைகள் நிட்டைகள்
முயலும் யோகந் துறவினி லில்லைநான்;
அயலில் இம்மெனும் போதி லறியலாம்.

உண்மை யாயெனைத் தேடினை யாயினீ
அண்மை யிற்கண நேரத்திற் காணலாம்;
திண்மை யாகக் கபீர்இது சொல்லுவேன்
உண்மை யீசன் உயிர்க்குயி ராயினன்.

# தமிழின் மறுமலர்ச்சி

**இலங்கையர்கோன்**

பொதுவாகத் தமிழ்ப் பத்திரிகைகளில் எழுதப்பட்டுவரும் தமிழே மறுமலர்ச்சி என்று வழங்கப்பட்டு வருகிறது. "அவர் மறுமலர்ச்சிக்காரர்" என்று சிலர் பரிகாசமாகக் கூடச் சொல்வார்கள். சிலர், சில ஆசிரியர்கள் எழுதும் பொருள் விளங்காத வார்த்தைக் குவியலையே மறுமலர்ச்சி என்று நினைப்பர்.

மறுமலர்ச்சி, எழுதப்படுந் தமிழிற்கு மாத்திரமே உரியது. பேசப்படுந் தமிழிற்கு எவ்வித மலர்ச்சியும் இல்லை. அது என்றும் மலர்ந்தே இருந்திருக்கிறது. தொல்காப்பியனும், நக்கீரனும், கம்பனும், இளங்கோவனும் பேசிய கன்னித் தண்டமிழ் அல்லவா அது?

எழுத்துத்தமிழ் சில காலங்களில் அந்நிய ஆட்சியினால் அயர்ந்துபோன துண்டு. முஸ்லீம்கள் இந்தியாவை வென்ற காலத்தும், பிறகு ஆங்கில மோகத்தினாலும் எழுத்துத்தமிழ் தாழ் நிலையை அடைந்தது.

பாரதியார் காலத்தில் இருந்து ஏற்பட்ட தமிழ் வளர்ச்சியையும், தமிழ் ஆர்வத்தையுமே ஆங்கில மோகத்தினால் தாழ்வுற்றிருந்த எழுத்துத் தமிழின் மறுமலர்ச்சி என்று கூறலாம். பாரதியார் மகாகவி என்பதைச் சிலர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவரே மறுமலர்ச்சிச் சக்கரத்தை முதலில் உருட்டி விட்டவர் என்பது எல்லோருக்கும் ஒப்பமுடிந்தது.

விக்கிரமாதித்தன் கதையும், மதன காமராஜன் கதையும், அல்லி அரசாணி மாலையும் தமிழாக, தமிழ் நாட்டில் வழங்கி வந்த காலத்தில், முதல் முதலில் நல்ல தமிழை எழுதியவர், பிரசங்க மாரியாகப் பொழிந்தவர், யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரே. அவரை ஏன் வசன மறுமலர்ச்சியின் உதயதாரகையாகக் கொண்டாடக்கூடாது? நல்ல வசன நடை தோன்றியதும், வளர்ந்ததும் யாழ்ப்பாணத்திலேயே.

பாரதியும், நாவலரும் போய்விட்டார்கள். இனி? இன்று ஏற்பட்டி

ருக்கும் இலக்கியக் கிளர்ச்சி அல்லது மறுமலர்ச்சி எங்களை எங்கே கொண்டுபோய் விடும் என்று சொல்வதற்கில்லை, அது குழந்தையின் தளர்நடைப் பருவங்கூட இன்னும் அடையவில்லை. வங்க, ஆங்கில, மராட்டிய, ஐரோப்பிய இலக்கியங்களின் பற்றுக்கோடு கொண்டு எழுந்துநிற்க முயற்சி செய்கிறது......அவ்வளவுதான்.

டார்ஜனீவ்வின் "புகை", டொஸ்டோயிஸ்கியின் "கரமர் ஜோவ் சகோதரர்கள்", டிக்கின்ஸின் "இரு நரகங்களின் கதை" ரவீந்திரரின் "புயல்" போன்ற நாவல்களுடன் ஒத்துப்பார்க்கும் பொழுது "கமலாமபாள் சரித்திர"மும், "பிரதாப முதலியார் சரித்திரமும்" துச்சம்—குழந்தையின் மழலைமாதிரி.

இது வருந்தக்கூடிய காரியமல்ல. தமிழ் இப்பொழுதுதான் நவீன இலக்கியத்தில் மேலோங்கி நிற்கும் மற்றப் பாஷைகளை நோக்கி விழித்தெழுந்து கொண்டிருக்கிறது. றிச்சாட்சன் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதிய "பமெலா" இன்று எங்கே? அது ஆங்கில ஆரம்ப நாவல்களில் ஒன்று. தமிழ் வளரும்-வளரும்! அதைக் குறித்து ஐயமே இல்லை.

இப்பொழுது தமிழ் இலக்கிய வானில் காளான்கள்போல் கவிகளும் கதாசிரியர்களும் தோன்றியிருக்கின்றனர். இந்தியாவில் பிரசுரமாகும் நான்கு ஐந்து நல்ல பத்திரிகைகளிலும் பலகுப்பைப் பத்திரிகைகளிலும், வாரா வாரம் அநேக கதைகள் கவிதைகள் பிரசுரமாகின்றன. இவைகளின் பயன், கதி? மிகமிகச் சொற்பமானவற்றைவிட மற்றவையெல்லாம் இலக்கிய வளர்ச்சியில் பின்தங்கிவிடும். ஆனால் அவைகளும் கிழவையாயினும் வளர்ச்சியின் படிகள்தான். குழந்தை திடீரென்று ஞானோபதேசம் செய்துவிட முடியாது. மழலை பேசித்தான் மேலே போகவேண்டும்.

நாவல் மேல்நாட்டுச் சரக்கு. சிறு கதையும் அப்படியே. மேல்நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் ஒரு பெரிய வித்தியாசம். அவர்கள் நாவலில் தொடங்கிச் சிறு கதைக்கு வந்தார்கள். நாங்கள் சிறு கதைகளில் ஆரம்பித்திருக்கிறோம். வியந்து பேசும்படியான நாவல் எதுவும் தமிழில் இன்னும் தோன்றவில்லை. இனிமேல் தோன்றுமோ என்பது சொல்வதற்கில்லை. ஏனெனில் இது இன்றைய பரபரத்த வாழ்க்கைக்கு ஏற்றபடி சிறுகதைச் சகாப்தம். விஞ்ஞான சாத்திர வளர்ச்சியினால் வாழ்வில் இன்னும் அதிகமான பரபரப்பு ஏற்படும் .........கல்வியையும் மாத்திரையாக்கி விழுங்கக்கூடிய காலமே வந்து விடலாம்.

கவிதையும் அப்படியே. இரண்டொருவரைத்தவிர மற்றக் "கவிகள்" எல்லோரும் குப்பை கூளமே எழுதுகிறார்கள். சொல் இல்லை; சுவை இல்லை; பொருள் இல்லை. தமிழில் மற்றெந்த மொ

ழியிலும் பார்க்க அதிகமான உயர்ந்த கவிதைச் செல்வம் உண்டு......அது எம் முன்னோர் வைத்துச் சென்ற நிதிக்குவை. "மேல்நாட்டார் அதை வணக்கம்" செய்யும்படி செய்வதே எழுத்தாளர்களின் முக்கிய கடமை உயர்ந்த கவிகள் தோன்றுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன......இதுகாறும் தமிழின் மறுமலர்ச்சியில் மகாகவிகள் யாருமே தோன்றவில்லை. "மகா கவி பாரதியார்" எழுதிய வ. ரா, தம் உணர்ச்சிகளுடன் ஓடிவிடுகிறார்... ....அவருடைய முடிபுகள் ஆலோசித்தே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

விமர்சனம கலைகளுக்கு ஒரு மிண்டி போன்றது. நல்ல முறையிற் பயன்படுத்தினால் பத்து வருட வளர்ச்சியை ஐந்து வருடத்திற்குச் சுருக்கி விடலாம். விமர்சகன் நிதான புத்தியுடையவனாக இருக்கவேண்டும். தன் சொந்தக் குரோதங்களைத் தன் விமர்சனத்தில் நுழையவிடக்கூடாது, ஓர் எழுத்தாளன் இலக்கிய விமர்சகனாக இருப்பது அவ்வளவு பொருத்தமில்லை. எழுத்தாளன் அலலாத-ஆனால், பல நூல்களிற் பரிச்சயமுள்ள ரஸிகனே விமர்சனம் செய்வதற்கு அதிக யோக்யதை உடையவன் என்பது என் கருத்து.

விமர்சனம், அழிக்குந் தன்மை இல்லாமல் ஆக்குந் தன்மை கொண்டதாக இருக்கவேண்டும். நையாண்டியாக எழுதினால் எந்த எழுத்தாளனுக்கும் மனம் நொந்துபோகும். ........

தமிழிலே வெளிவந்த நூல்கள் சிலவற்றைப்பற்றி, காலஞ்சென்ற கு. ப. ரா. முதல்தரமான விமர்சனங்கள் எழுதியிருந்தார். பிழைகளை முறையாகச் சுட்டிக் காட்டி அது திருந்தும் வழியையும் காட்டலாம். ஆனால் குத்திப் புண் செய்யக்கூடாது.

வளருந் தமிழில் உலக இலக்கியங்கள் தோன்றுமோ, 'நொபெல்' பரிசுபெறும் யோக்யதையுள்ள ஆசிரியர்கள் தோன்றுவார்களோ, காப்பியங்கள் ஆக்கப்படுமோ என்பனபோன்ற கேள்விகளுக்குக் காலத்தின் போக்கே விடை சொல்லவேண்டும். தமிழனுக்கு ஒன்றிலும் தோல்வி அடைந்ததில்லை. சமயத்தில் ஓங்கிவிடுவள். இதில் இளைத்துப்போவளோ.........?

---

*'தமிழின் மறுமலர்ச்சி' என்ற இக்கட்டுரை, வரிசையாகத் தொடர்ந்து வெளிவரும். தமிழ் நாட்டின் தலைசிறந்த பல எழுத்தாளர்கள் இந்தப் பகுதியில் எழுதுவார்களென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.*

---

# பழையதும் புதியதும்

அ. செ. மு.

"ஏய்! எய்!" என்று இரண்டு அதட்டல் போட்டு மாடுகளைத் தட்டிவிட்டான் கார்த்திகேசு. ஒரு நிலையில் நின்று அலுத்துப்போன மாடுகள் உற்சாகத்தோடு முதலில் கொஞ்சத் தூரம் ஓடின. இந்தச் சமயம் கார்த்திகேசு என்பக்கம் திரும்பி, பெருமைபொங்க ஒரு கம்பீரப்பார்வை பார்த்தான். அதற்கு ஒன்றும் சொல்லாமலிருந்தால் நல்லாயிருக்காதல்லவா?

"அவசரமில்லை, அண்ணை! ரயிலுக்கு நேரமிருக்கு; மாடுகள் மெள்ளப் போகட்டும். எது, சோடி வாய்த்துவிட்டதுபோலிருக்கே உனக்கு!" — என்று சும்மா சொன்னேன். கால்மைல் தாண்டியதும் நடக்கும் சங்கதி எனக்குத் தெரியாதா? ஆனால், மனுஷன் பாவம், நான் கூறியதை மெய்யென்றே நம்பிவிட்டான். முகஸ்துதியிலே பழைய காலத்து வெள்ளை மனம் தன்னை மறந்து போய்விடுகிறது.

ஆசனப் பலகையில் நேராக இருந்த மனுஷன் திரும்பி ஒரு கோணமாக இருந்துகொண்டு, "ஹாம்! இதெல்லாம் என்ன மாடுகள் தம்பி, முன்னே முன்னே எப்படி எப்படி மாடுகள் என்னிடம் நின்றன தெரியுமோ? உனக்குத் தெரியாது - உனது பெரியப்பாவுக்குத் தெரியும். வேறொன்றுமில்லை, எதற்கும் கைராசி வேண்டும். எல்லாம் மாடுகளைப் பழக்குகிற விதத்திலிருக்கு. எப்பேர்ப்பட்ட சண்டி மாடுகளும் கார்த்திகேசனின் கைக்கு வந்துவிட்டால் சவாரிச் சுட்டியன்களாகிவிடும் என்று முன்னெல்லாம் பேசிக்கொள்வார்கள்—" இப்படி ஆரம்பித்துப் பேசிக்கொண்டு போனவன், இடையில் ஒருதரம் நிறுத்தி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு மறுபடியும் சொன்னான்:

"...ம்... அந்த நடப்பு எல்லாம் முன்னொரு காலத்திலே. அந்தக் காலம்தான் மலையேறிவிட்டதே. இப்போ தம்பிமார்களுக்கு எடுத்ததற்கெல்லாம் வீட்டு வாசலிலே கார். அதிலே அவசர அவசரமாய்ப் பறந்தடித்துக்கொண்டு ஓடித் திரிந்தால் நாகரிகமாம்—"

கார்த்திகேசுவின் மாடுகள் காற்கட்டை தூரம் கடந்து வந்துவிட்டன என்று இப்பொழுது தெரிந்தது. காரியத்திலே கட்டையான மனிதன் வாய்ப் பேச்சிலே அட்டகாசம் போடுவதுபோல,

கடகடவென்ற முழக்கத்தோடு குலுக்கி அடித்துக்கொண்டு வண்டி ஊர்ந்தது. கொழும்பு ரயிலுக்கு அதிகம் நேரமிருந்தபடியால் மாடுகளை அவற்றின் போக்கில் போகவிட்டு, நான் கார்த்திகேசுவின் வாயை மெள்ளக் கிளற ஆரம்பித்தேன். ஆனால்... அடடா என்ன செய்துவிட்டேன்! இந்த விளையாட்டுக் குணத்தினால் கடைசியில் மனுஷனுடைய நொந்து போன இதயத்தையே அல்லவா கிளறிவிட்டேன்!

கார்த்திகேசு தொடர்ந்து பேசிக்கொண்டே போனான்:— 'உலகம் கீழ்மேலாகப் புரண்டு கொண்டு வருகிறது தம்பி. அதில் எல்லாம் எனக்குக் கவலையில்லை. மரம் வளருகிறதுக்குக் காவோலைகள் விழுந்து புதிதாக வரும் குருத்தோலைகளுக்கு இடம் விட்டுக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் ஒன்று, காவோலைகள் விழுந்த பிற்பாடும் அவை இருந்த அடையாளமாக மரத்தில் வரைகள் இருக்கோ இல்லையோ அது போல, காலம் எப்படி எப்படி மாறிவிட்டபோதிலும் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைத் தழும்புகள் இலேசில் அவன் மனத்தைவிட்டு மறைந்துபோகிறதில்லை. உன்னுடைய வீட்டுக்காரர்கள் என்னை மறந்துவிட்ட போதிலும், எப்படிப் புறக்கணித்துவிட்ட சமயத்திலும் அவர்களுக்கு வண்டில்விட்ட அந்தப் பதினைந்து வருஷ காலத்தைச் சாகும்வரை என்னால் மறக்கவே முடியாது. தாய்பிள்ளையைப் போல உங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே இருந்து வந்த எனக்கு என்ன வினை வந்தது கடைசியில்! உனக்குப் பெயர் வைத்தது யார் என்று தெரியுமோ? உனது பெரியம்மாவைக் கேட்டுப்பார், யார் என்று சொல்லுவா. இருபது வருஷங்களுக்கு முன்பு உங்கள் வீட்டில் எந்தநேரமும் 'காத்தி அண்ணை காத்தி அண்ணை' என்ற சத்தமாகவேதானிருக்கும். உங்கள் வீட்டில் என்ன நடந்தாலும் அது காத்தி அண்ணையை அறியாமல் நடக்காது. இந்த வண்டிக்காரனுக்கு உனது பெரியம்மா கையிலே பிசைந்துதந்த சோற்று உருண்டை — இதோ வயிற்றில் ஒரு பக்கத்தில் இன்றைக்கும் இருக்கிறது, தம்பி! ...

இவ்விதம் உணர்ச்சிவசப்பட்டுப் பேசிக்கொண்டு போன கார்த்திகேசு எதிரே ஒரு கார் வருவதைக் கண்டதும் 'சட்' டென்று வண்டியை ஓரமாக ஒதுக்கினான். கார் சமீபமாக வந்து வண்டியை விலத்திக் கொண்டு போயிற்று. அப்பொழுதுதான் கார் இன்னாருடையது என்று அவனுக்குத் தெரிந்தது போலிருக்கிறது. கார் வண்டியைத் தாண்டும்போது அதன் டிரைவரை எரித்துவிடுவான் போல முழித்துப் பார்த்தான். கார் அப்பால் போய் மறைந்த பிற்பாடு நெடுமூச்சு ஒன்று

எழுந்தது அவனது நெஞ்சைப் பிளந்துகொண்டு.

இவ்வளவுக்கும் நான் அவனையே கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்ததை அவன் கவனித்தானோ என்னவோ, 'சட்' டென்று என்பக்கம் திரும்பி, "இப்போ போச்சுதே பசாசு ஒன்று, இதுதான் என் வாழ்விலே மண்ணை அள்ளிப் போட்டது. ஓண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைக் கலைக்கப் பார்த்ததாம். முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைக்கப் பார்த்ததாம். நேற்று வந்த மலையாளத்தானும் அவனுடைய காரும் இந்த ஏழை வண்டிக்காரனை ஒழித்துவிடப் பார்த்தார்கள். ஆனால்......" என்றான்.

கார்த்திகேசு இப்படித் தொட்டுத்தொட்டுப் பேசியது விஷயத்தை முழுக்க அறியும்படி என்னைத் தூண்டிற்று.

"என்ன நடந்தது, அண்ணே? தயவுசெய்து எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லு" என்று கேட்டேன்.

வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் வேறு கிடைத்து விட்டால் பேசவேண்டுமா? கார்த்திகேசு சற்று விவரமாகக் கதையைச் சொன்னான்: "நடந்தது என்ன தம்பி, எல்லாம் காலவித்தியாசம்; அவ்வளவுதான். கார் வந்தது, வண்டி போயிற்று. புதியதைக் கண்டதும் பழையதைக் கைவிட்டார்கள். புதுப் பெண்டாட்டியைக் கண்டதும் வயசான தாய்க் கிழவியைச் சாகக் கொன்றுவிடுகிறதா? ஊர் ஊராகக் கார்கள் வந்து நின்ற அந்த நாட்களில் என்னைப்போலக் கூலி வண்டி வைத்துப் பிழைத்தவர்கள் எத்தனைபேர் பெரும் கஷ்டத்துக்குள்ளானார்கள், தெரியுமோ? தளுக்கி மினுக்கித் திரியும் இந்த மோட்டக் கார்களைக் காணும்போது எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. அரிச்சந்திர மகாராசாவின் பூச்சக்கரக் குடையை அபகரித்து வரும்படி விசுவாமித்திர முனிவர் அனுப்பினரே நாட்டியப் பெண்கள்—அவர்களுடைய ஞாபகம் வருகிறது தம்பி, இந்த அந்நியப் பசாசுகளைப் பார்க்கும்போதெல்லாம்! ஆனால் எங்களுடைய மாட்டுவண்டிலோ அந்நிய முதலுமல்ல; அந்நியர் செய்ததுமல்ல. அதற்குக் கொடுக்கும் பணத்தில் ஒரு செம்புச் சதமும் வெளியே போவதில்லை இதையெல்லாம் யார் சிந்தித்துப் பார்க்கிறார்கள்? மனிதனுக்குச் சிந்தனை இருந்தால் உலகத்தில் தாசிகள் ஏன் இருக்கிறார்கள் தம்பி? ஏதோ கண்டதே காட்சி கொண்டதே கோலம்! இந்த மனப்பான்மை — ஊரெங்கும் பரவிக்கொண்டு வந்த இந்த அந்நிய மோகம் — உனது பெரியப்பாவையும் போய்ப் பிடித்து விட்டது.

அந்தச் சமயம் இந்தியாவிலிருந்து ஒரு பெரிய தவில் வித்துவானைக் கூப்பிட்டிருந்தார் அவர். ஒருநாள் என்னைக் கூப்

பிட்டுச் சொன்னார்: 'கார்த்திகேசு, இப்போ எனக்குவந்திருக்கும் தவில்காரர் மாட்டுவண்டியில் ஏறிப் பழக்கமில்லையாம், என்ன செய்வது? இந்தவருஷம் போகட்டும், அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ளலாம்.'

எனக்கு என்னமாதிரி இருந்திருக்கும் என்று நினைக்கிறாய் தம்பி? உனது பெரியப்பா வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும் நான் அவரது உள்ளப்போக்கைத் தெரிந்துகொண்டுவிட்டேன். இருந்தும், இதை ஓரளவுக்கு எதிர்பார்த்திருந்தவன் தான் நான். எப்படியானபோதிலும் பதினைந்து வருஷத்துத் தொடர்பு அல்லவா? இங்கிருந்து காரைதீவுக்கோ, மட்டுவிலுக்கோ இன்னுமதற்கப்பாலுமோ பெரிய அப்பா சேவுகம் போகும் வணவனுந்திரங்களுக்குச் சாமம் சாமமாக, இரவு இரவாக, இருட்டோ நிலவோ வெய்யிலோ மழையோ பனியோ காற்றோ-ஒன்றையுமே சட்டைபண்ணாமல் வண்டி ஓட்டியவனல்லவா? உற்சவங்களிலே நடைபெறும் மேளக் கச்சேரிகளில் உனது பெரியப்பா மேளத்துக்குக் கிடைக்கும் புகழிலும் கீர்த்தியிலும், நன்மையிலும் தீமையிலும் நானும் அவர்களில் ஒருவனாக நின்று பங்கு பெற்றவன் அல்லவா?

எனது வண்டி ஏற்றிச் சென்ற வடிவேலு நாயனக்காரரை எங்கேயோ இருந்து வந்த மலையாளத்தானும் அவனது காரும் ஏற்றிச் செல்கிறது என்பதை எண்ணவே எனக்கு வயிறு எரிந்தது. அடக்க முடியாத ஆத்திரமும் கோபமும உண்டாயின. வயிற்றெரிச்சலிலும் ஆத்திரத்திலும் நான் செய்த விசர் வேலைகளை இப்பொழுது நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது. ஆனால் அப்பொழுது அவை எனது உள்ளக் குமுறலை ஓரளவு ஆற்றி வைத்தன.

ஒருநாள் காரோடு என் வண்டியைச் சவாரி விட்டுப் பார்த்தேன். மாடுகள்மேல் தொட்டு அறியாதநான் அன்றைக்கு அவற்றிற்கு அடித்த அடிகளை நினைத்தால் இன்னமும் தேகம் நடுங்குகிறது தம்பி!

இன்னொரு நாள் வேறொரு காரியம் செய்தேன். தெருவில் என் வீட்டுக்குப் பக்கத்தே ஓரிடத்தில் ஒரு நாள் ஒளித்திருந்து அந்தக் கார் போகும் சமயத்தில் இரண்டு கல்லை அதன் மீது விட்டெறிந்தேன். யாருடைய நல்ல காலமோ இரண்டு எறியும் கார்மீது படவில்லை. ஓடுகிற கார்மீது கல்லெறிவதற்கும் அநுபவம் வேண்டும் என்று அப்பொழுதுதான் அறிந்து கொண்டேன்.

கடைசியில் இந்த அற்ப காரியங்களினால் ஒரு பலனும் ஏற்படவில்லை. ஊர் முழுவதையும் மலையாளத்தான் தனது வசமாக்கிக்கொண்டான். அவனுக்கிருந்த ஓய்வு ஒழிச்சல் இல்லாத 'சவாரி'

யைப் பார்த்து மேலும் கார்கள் ஊரிலே வந்து குவிந்தன.

நிலைமையைப் பார்த்துவிட்டு நான் மண்வெட்டியைக் கையில் தூக்கினேன்......

ஏது எப்படியான போதிலும் நீதிக்கு ஒரு இடம் உலகில் என்றைக்கும் இருக்கவே இருக்கிறது தம்பி!

பதினைந்து பதினாறு வருஷங்களுக்குப் பிறகு இப்போ சண்டை தொடங்கி பெட்ரோல் இறக்குமதி குறைந்து அது கட்டுப்பாடு ஆய்ச்சோ இல்லையோ, வண்டிக்காரர்களும் மறுமலர்ச்சி' அடைந்தார்கள். அவர்களுக்கு நல்ல காலம் பிறந்தது. வயலுக்கு எரு இழுத்த மாடுகளும் வண்டிகளும் சலங்கைச் சத்தத்தோடே பெரிய றோட்டில் ஓட ஆரம்பித்தன. வடிவேலு நாயனக்காரரே வலியக் கூப்பிட்டு என்னிடம் கேட்டிருக்கும்போது நான் ஏன் சும்மா இருக்கப்போகிறேன்? இருபது வருஷங்களுக்கு முன்னே வண்டி ஓட்டிய அந்த இனிய நாட்கள் திரும்பவும் ஒருமுறை என் சீவியத்தில் மீண்டும் கிட்டுமா என்று ஏங்கியிருந்த எனக்கு இது எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும் என்பது நான் சொல்லிக்கொள்ளக் கூடியதல்ல. 'கார்த்திகேசு, இந்த வருஷம் எனது மேளத்துக்கு நீதான் வண்டிக்காரன்'— என்று வடிவேலு நாயனக்காரர் சொல்லிய வார்த்தைகள் எனக்குத் தேன்போல இனித்தன. பால் போன்ற வெண்ணிலவில் வெள்ளைவெளேரென்றிருக்கும் தெருவழியே எனது வண்டி மறுபடியும் மேளம் ஏற்றிச் செல்வதை எண்ண எனக்கு ஆனந்தம் பொங்கியது. ஆனபோதிலும்...'' என்று கார்த்திகேசு சட்டென்று பேச்சை மழுப்பினான்.

''அது என்ன காத்தி அண்ணே?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை, ஒரு சின்னச் சந்தேகம், தம்பி. இந்தச்சண்டை இருக்குதோ இல்லையோ, இது முடிந்த பிற்பாடு 'பெட்ரோல் கிட்ரோல்' எல்லாம் வந்து கார்கள் பழையபடி ஓட ஆரம்பித்துவிட்டால் வண்டிக்காரர்கள்பாடு பழைய படி கறுப்பன் கதைதானும், மெய்தானே?''

இதைக் கேட்கும்போது அவனுடைய குரல் சோர்வடைந்து காணப்பட்டது.

'' பயப்படாதே அண்ணே! அணுக்குண்டு கண்டுபிடித்திருக்கிறார்களாம்'' என்றேன் நான். வேறு எதைச் சொல்ல?

நீங்கள் யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானத்திற்கு வரும்போது
முதலில் உங்கள் கவனத்தில் இருக்கவேண்டியது

எவறெஸ்ற் ரீ றூம்ஸ்

# கிராமக் கவிதைகள்

"இரட்டையர்கள்"

உடலுக்கும் உள்ளத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. உடலின் அதிர்ச்சி உள்ளத்தையும், உள்ளத்தின் அதிர்ச்சி உடலையும் பாதிக்கின்றன. சுகதுக்க உணர்ச்சிகளே இவ்வித உபாதைகளைக் கிளப்பிவிடுகின்றன.

பிறப்பு இறப்பு என்ற இரு எல்லைக் கோடுகளின் உள்ளே நின்று, பிராணதாரப் பிரயத்தனம் செய்யும் நமக்கு, வாழ்க்கை முழுவதும் துக்க மயமாகவோ அன்றிச் சுகமயமாகவோ அமைவதில்லை. எதிர்பார்த்தோ எதிர்பாராமலோ இவ்விருவித உணர்ச்சிகளையும் அனுபவிக்கிறோம். ஒன்றாக அல்லது தனித்தனி அவை நம்மை ஆட்சிப்படுத்துகின்றன; ஆட்டிவைக்கின்றன!

உணர்ச்சியின் வசப்பட்டவன் வெறுமனே உணர்ச்சியற்ற 'உம்மாண்டி' யாக இருத்தல் முடியாது. அதன் சலனத்தை - உணர்ச்சித் துடிப்பை - 'ரெலிபோன்' இயந்திரம்போல உடனுக்குடன் வெளிப்படுத்தித் தீரவேண்டியவன் ஆகின்றான். இல்லையேல், அவன் வாழ்க்கை பெரியவோர் நரகக் குழியாகிவிடும். இதற்காகவே நமக்குப் பாஷை அவசியமாயிற்று.

பாஷையினாலேதான் ஒருவன் தன் மனக் கருத்தை (பாட்டாகவோ அன்றி வசனமாகவோ) மற்றவர்களுக்கு நன்கு வெளிப்படுத்த முடிகிறது. இசை மயமான இந்த உலகில், வசனத்தைவிடப் பாட்டே நமது உணர்ச்சிகளை அவற்றின் முழு வேகத்துடன் எளிதாகப் பிரதிபலித்துக் காட்டுகிறது. அதுதான் நடைமுறை.

பாட்டிலும் இருவகையுண்டு: ஒன்று இலக்கண வரம்புகளுக்குக் கட்டுப்பட்டது. பெரும்பாலும் யாப்பு அணி அறிவினாலேயே அமைக்கப்படும் சொல்லலங்கார வேலைப்பாடுள்ளது அது; தங்க முலாம் பூசிய பித்தளை நகைபோல. ஆனால், இயற்கையான கவியாற்றலின் முதிர்ச்சியினால் பிறக்கும் மற்றொருவகைப் பாடல் இருக்கின்றதே, அதுதான் உயர்ந்தது; உயிரும் ஒளியும் நிறைந்தது; மாற்றுக் குறையாத தங்கநகைபோன்றது அது.

நாடோடிப் பாடல்கள் என்று நாம் கூறும் கிராமக் கவிதைகள் எங்கே, எப்படிப் பிறக்கின்றன? உண்மையில் நாகரீக உலகத்தாரால் 'பட்டிக்காடுகள்' என்று இழிவாகக் குறிப்பிடப்படுகிற நாட்டுப்புறங்களிலேதான் அவை

**T. N. LINGAM**
**& SON**

*Dealers in:-*

- Spare Parts
- Accessaries
- Motor Vehicles
- Bicycles
- Tyres

&

Electrical Contractors

**K.K.S. Road,** Phone 108
JAFFNA


உற்பத்தியாகின்றன. அவ்விடங்களிலுள்ள ஏழைத் தொழிலாளியும் உழவனும்—வேறு என்ன, அவர்கள் பெரிய செல்வச்சீமான்களாகவா இருக்கிறார்கள்?—தங்தள் உழைப்பின் களைப்பை மறப்பதற்கும், இன்பமாகப் பொழுது போக்குவதற்குமாகத் தத்தமது சூழலுக்கு இயைந்த சிறுசிறு பாடல்களை ஆக்கிக்கொள்ளுகிறார்கள். பொருள் ஆழமும் நல்ல இசைப் பொருத்தமும் உள்ள பாடல்களாக அவை அமைந்துவிடுகின்றன. அவற்றை எழுத்தில் அமைப்பதற்கான சாதனங்களோ எழுத்தறிவோ அவர்களிடம் ஏது! எனவே வாய்மொழியாக, எழுதா மறையாக அவற்றை வளர்த்து வருகிறார்கள்.

இந்தக் கர்ணபரம்பரைக் கவிதைகளில் காதல், வீரம், சோகம், கிண்டல், கேலி ஆகிய இவையெல்லாம் அவர்களின் உணர்ச்சிக்கேற்ப இடம் பெறுகின்றன.

இவ்வகைக் கிராமக் கவிதைகளைத் தேடித் தொகுக்கும் முயற்சி, தமிழ்நாட்டில் இப்போது சிலகாலமாக வளர்ந்து வருகிறது. இது இலக்கிய ரஸிகர்களால் நன்கு வரவேற்கப்பட வேண்டியது.

# நாங்கள்

—நாவற்குழியூர் நடராஜன்.

பகைவர்தம்மை நடுநடுங்கப் பண்ணிவைத்த பாண்டியர்
பாதுகாப்பின் கீழுயிர்த்த பாரதர்கள் நாங்களா?
வகைகள்கொண்ட சேனைவந்து வளையமிட்ட போதெலாம்
வாளைவீசி வாகைபூண்ட வம்மிசத்தார் நாங்களா?
தகைமைகொண்ட சேரசோழர் தங்குலத் துதித்தநாம்
தாழ்மடித்துக் கைகுவித்துத் தலைவணங்கி நிற்பதா?
சிகைகள்போவ தாயினும்நம் ஜென்மபூமி வேறுளோர்
சீமையாளர் கைக்கொடுத்துச் சீரிழந்து வாழ்வதா?

●

அந்நியர்கள் வந்துநாட்டை அடிமைகொள்ளப் பார்க்கையில்
ஆர்த்தெழுந்த திங்குமுன்னர் ஆண்பிள்ளைகள் மட்டுமோ?
கன்னியர்கை வாளெடுத்துக் கட்டுமீறிச் சென்றுபோர்க்
காட்டினூடு பகைவர்தம்மைக் கண்டதுண்ட மாக்கினர்;
சென்னிவீழ வீழநின்று ஜென்மபூமிக் காகநம்
சிறுவர்கூடச் சமர்புரிந்த சீருமுண்டு; அஃதெலாம்
பன்னியென்ன பயனுடைத்து? பண்டைநாள் திகழ்ந்தபோற்
பண்ணிவைக்க வேண்டும்இந்தப் பாரில்எங்கள் நாட்டினை.

●

கொடியர்தம்மை முடிவுசெய்யக் கொற்றவர்கள் இல்லையோ?
கோதிலாத பேரைவாழ வைக்கமற்றோர் இல்லையோ?
கடமையென்று நாடுகாக்கக் கற்றவர்கள் இல்லையோ?
கடையர்தம்மை ஓட்ட வலிமை உற்றவர்கள் இல்லையோ?
அடிமையாக நாங்கள்என்றும் படியில்அஞ்சி வாழவோ?
அவர்கள்ஆள நாங்கள்என்ன ஆண்மையற்று மாழவோ?
கடவுயானை தேர்கள்கொண்ட பெருமை யின்று போகவோ?
கடவுளே! இதென்னஇந்தக் காலம்வந்து சேரவோ?



# எலிக் குஞ்சுச் செட்டியார்

✳ "வாத்தியார்"

நான் இப்போது பெரிய பணக்காரன். இந்தப் பட்டணத்திலுள்ள எல்லோருக்கும் என்னைத் தெரியும். ஆனால், சிவநேசம் செட்டியார் என்ற என்னுடைய பெயர் மாத்திரம் ஒருவருக்கும் தெரியாது. என்னை எல்லோரும் 'எலிக்குஞ்சுச் செட்டியார்' என்றுதான் சொல்வார்கள். ஏனென்றால், நான் இவ்வளவு பணக்காரன் ஆனதற்கு ஓர் எலிதான் காரணம். ஓர் எலியை — அதுவும் ஒரு செத்த எலியை — மூலதனமாக வைத்து வியாபாரம் செய்து நான் பணங் தேடினேன் என்று சொன்னால், நீங்கள் நம்பமாட்டீர்கள்தான். ஆனாலும் நான் சொல்வது முற்றிலும் உண்மை. என் சரித்திரத்தைக் கேட்டுவிட்டுப் பிறகு சொல்லுங்கள், நான் சொல்வது பொய்யா மெய்யா என்று.

நான் என் தாயின் வயிற்றில் இருக்கும்போதே என் தகப்பனார் இறந்துவிட்டார். என் தாய் மிகுந்த பாடுபட்டு என்னை வளர்த்துப் பின்பு ஒரு சிறிய பள்ளிக்கூட உபாத்தியாயரிடம் சம்பளமில்லாமல் நான் கல்வி கற்கவும் ஏற்பாடு செய்தாள்.

ஒருநாள் என் அன்னை என்னை அழைத்து, பின்வருமாறு சொன்னாள்:

"மகனே, நாங்கள் ஏழைகள்; மிகுந்த கஷ்டமனுபவிக்கிறோம். எப்போதும் இப்படியே இருக்க முடியாது. நீ இப்போது பெரியவனாய்விட்டாய். இனி எங்கள் குலத் தொழிலான வியாபாரத்தைச் செய்து பொருள் தேடவேண்டும். மூலதனம் இல்லாமல் எப்படி வியாபாரம் செய்வதென்று நீ ஆலோ

சிக்க வேண்டாம். அடுத்த தெருவிலுள்ள பெரிய வியாபாரியான கதிரேசன் செட்டியார், வறியவர்களான தன் குலத்தவர்கள் வியாபாரம் செய்ய விரும்பினால், அவர்களுக்கு வேண்டிய மூலதனம் கொடுத்து உதவி செய்கிறார். நீயும் அவரிடம் போய் வேண்டிய உதவியைப் பெற்று வியாபாரம் செய்" என்று என் தாய் சொன்னாள். நானும் அப்படியே அங்கே போனேன்.

நான் போனபோது யாரோ ஒரு வாலிபன் செட்டியாரின் முன்னிலையில் தலை குனிந்து மௌனமாக நின்றான். செட்டியார் அவனைக் குறை கூறிக்கொண்டிருந்தார்: "நான் இருமுறை உனக்குப் பணவுதவிசெய்தும் நீ அதைக்கொண்டு பொருளீட்டத் தெரியாமல் எல்லாவற்றையும் இழந்துவிட்டு இங்கு வந்து நிற்கிறாயே! அதோ பார் அந்த மூலையில் ஓர் எலி செத்துக் கிடக்கிறதே; அந்த எலியை மூலதனமாகக் கொண்டே பெரும் பொருள் தேடிவிடுவான் திறமையுள்ள வணிகன். நீயோ என்னால் நான் தந்த பெருந் தொகை மூலதனத்தையும் அழித்துவிட்டாயே!"

அவர் இவ்வாறு சொன்னவுடன், அந்த எலியை எனக்கே மூலதனமாகத் தரவேண்டுமென்று கேட்டேன். அவர் முதலில் ஆச்சரியமடைந்தாராயினும், எலியை எடுத்துக்கொள்வதற்கு உத்தரவளித்தார். உடனே நான் அதை எடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டேன். எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு வரும் வழியில் தானியக் கடையொன்றில் வளர்க்கப்படும் பூனையின் உணவுக்காக அந்த எலியைக் கொடுத்துவிட்டு அதற்கு விலையாகக் கொஞ்சம் கடலை வாங்கினேன். அதை அவித்தெடுத்துக்கொண்டு நகரத்தின் வெளியே ஒரு மா நிழலிற் போயிருந்தேன். அப்போது விறகு வெட்டிகள் இருவர் வெகு தூரத்திலிருந்து விறகுச் சுமையுடன் அங்கு வந்தார்கள். அவர்களுக்கு அந்தக் கடலையைக் கொடுத்துத் தாகத்திற்குத் தண்ணீருங் கொடுத்தேன். இந்த உணவுக்குப் பதிலாக அவர்கள் இவ்விரண்டு விறகு துண்டுகள் போட்டுவிட்டுப் போனார்கள்.

அவற்றைக் கொண்டுபோய் விறகுக் கடையிற் கொடுத்துச் சில காசுகள் பெற்றேன். அந்தக் காசுக்கு மறுபடியும் கடலை வாங்கி அவித்து விறகு வெட்டிகளுக்கு விற்றேன். இவ்வாறு செய்து சில நாட்களிலேயே அந்த விறகு வெட்டிகளிடமிருந்த விறகு முழுவதையும் நானே வாங்கிவிட்டேன்.

திடீரென வானம் இருண்டது. இடி முழக்கத்துடன் இரண்டு நாட்கள் சோனுமாரியாக அகாலமழை பெய்தது. இதனால் எதிர்பாராமல் பட்டணத்தில் விறகுப் பஞ்சம் ஏற்பட்டு விடவே, நான் நியாயமான விலைக்கு என்னிடமிருந்த விறகை விற்று ஏராளமான பொருளைத் தேடினேன். உடனே செட்டித்தெருவில் பெரிய கடையொன்று வாங்கி வியாபாரம் தொடங்கினேன். அப்போது நான் இந்த நிலைமையை அடைவதற்குக் காரணமாயிருந்த கதிரேசன் செட்டியாரையும் செத்த எலியையும் மறந்துவிடாமல், தங்கத்தால் ஓர் எலி செய்து செட்டியாரிடம் கொண்டுபோய்ச் சமர்ப்பித்து என் வரலாற்றையும் சொன்னேன். இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த அவர், தனது மகளை எனக்கு மணஞ்செய்து தந்தார். அதோ தெரிகிறதே, அதுதான் நாங்கள் வாழும் மாடமாளிகை.

இப்போது சொல்வீர்களா, நான் சொன்னது பொய்யென்று?

---

# விவாகம்

அராலி ஆங்கில பாடசாலை ஆசிரியர் பண்டிதர் வி. நவரத்தினம் அவர்களுக்கும் கந்தரோடை [F. M. S. Pensioner] ஸ்ரீமான் தம்பு அவர்களின் புத்திரி செல்வி நாகேஸ்வரி அம்மாளுக்கும் 27-3-46 புதன் கிழமை இரவு 8 மணிக்கு மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

# இரண்டு ஊர்வலங்கள்

'சம்பந்தன்'

மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த சமயத்திலும் விதி அவளுடைய படுக்கையை அந்த அரச மரத்தடியிலிருந்து மாற்றி வைக்க விரும்பவில்லையென்றே சொல்லவேண்டும். அவளுக்குப் பக்கத்தில் ஸ்வாமி மட்டும் உட்கார்ந்திருந்தான். சற்றுத் தொலைவில் ஒரு கிழவன் விழுந்து கிடந்தான். மற்றவர்களை அங்கே காணவில்லை. ஸ்வாமி அடிக்கொருதரம் அவளைக் கூப்பிட்டுப் பார்த்தான். ஒருவேளை பிரக்ஞையற்றுக் கிடக்கும் அந்தப் பெண் திடீரென்று எழுந்திருந்து பேசுவாள் என்று எண்ணினன்போலும்!

இப்படி ஆகிவிடுமென்று அவன் கனவிலும் எண்ணியிருக்கவில்லை. சாயந்தரமெல்லாம் படுத்தபடியே கிடந்தாளேனும் நன்ருகப் பேசினள். அப்படி வெகு நேரமாக அவளோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டு "இன்றைக்குக் கொஞ்சம் கஞ்சி வைத்துக் கொடுக்கட்டுமா" என்று கேட்டுக்கொண்டே எங்கோ ஓடிப்போய், கொஞ்சம் அரிசியும் கொண்டு வந்தான். அப்பொழுதும் அயர்ந்து கிடப்பது போலவே அவள் காணப்பட்டாள். ஆனல் கஞ்சியை வைத்துக் கொண்டுவந்து எழுப்பிப் பார்த்தபொழுதோ......!

○

வழக்கம்போல அங்கே வந்து விழுந்து கிடக்கும் மற்றப் பிச்சைக்காரர்கள் எல்லோரும் அன்று அந்த நகரத்துப் பிரபு ஒருவருடைய பெண்ணின் கல்யாண வைபவத்தைப் பார்க்கப் போய்விட்டார்கள். எல்லா ஜனங்களுக்குமே அது ஒரு ஆனந்தமான சம்பவமாக இருக்கும்போது, சாதாரணமான அந்த ஏழைகளுடைய நிலையைச் சொல்லவேண்டியதில்லை. ஆயிரக்கணக்காக ரூபாய்களைச் செலவு செய்து கொட்டகைகள் போட்டு அலங்காரங்கள் செய்திருந்தார்கள். வாத்தியக்காரரும் மற்றும் வித்வான்களும் பல தேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்தனர். நண்பர்களென்றும், பந்துக்களென்றும் வந்து குவிந்த கும்பலே பார்ப்பதற்கு அதிசயமாக இருந்தது. இந்தக் காட்சிகளைப் பார்ப்பதைவிட்டு, இருள் சூழ்ந்த அந்த மரத்தடியிலே விழுந்து கிடக்க யார்தான் விரும்புவார்கள்? அல்லாமலும், அவள் சுகமாகக் கிடந்ததை நேராகப் பார்த்துவிட்டே அவர்கள் மாலை

யில் அங்கே ஓடிச் சென்றார்கள். ஆனால், ஸ்வாமியும் அந்தக் கிழவனும் அவனை விட்டுப்போக விரும்பவில்லை.

O

ஸ்வாமி கொஞ்ச நாட்களுக்குமுன்புதான் இந்தக் கூட்டத்தார்களோடு வந்து சேர்ந்தான். அதற்கு முன்பெல்லாம் உணவுக்காகத் தேசாந்தரஞ் செல்லும் பறவைகள்போல எங்கெங்கோ சுற்றி அலைந்துகொண்டிருந்தான். அப்பொழுது நிரந்தரமாகச் சில மாதங்களுக்கேனும் அவன் ஒரு இடத்தில் நிலைத்து இருந்ததில்லை. இங்கு வந்தபிறகே இயல்பான அவனுடைய பழக்கம் மாறியது. உயர்ந்த அந்தஸ்துக்களில் இருந்துகொண்டு வாழுகிற மனிதர்களை விட இந்தக் கூட்டத்தவர்களிடம் அமைந்திருந்த அற்புதமான இயல்புகளே அப்படி அவனை ஓடவிடாமல் தடுத்து வைத்திருந்ததென்று சொல்லவேண்டும்.

காலையிலே அவர்கள் அந்த இடத்தைவிட்டுத் தனித்தனியாக ஒவ்வொரு திசையால் போவார்கள். மாலைக்காலமானதும் திரும்பிவந்து கூடுவார்கள். எல்லோரும் வந்து சேர்ந்ததும், 'இன்றைக்கு யாராவது வயிற்றுக்குக் கிடைக்காமல் வந்தீர்களா' என்று விசாரித்து, வைத்திருக்கிறவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவார்கள். பிறகு எல்லோருமே சோந்துகொண்டு தங்கள் துன்பங்களை மறந்து சிறு குழந்தைகள்போல விளையாடுவார்கள்; பாடுவார்கள். இந்தச் சமயங்களிலெல்லாம் அவள் எல்லோருடைய கண்களின் முன்பும் நிற்பாள். அவளுடைய ஒவ்வொரு செய்கையும் மற்றவர்களை வசீகரித்து ஒரு புதுமையின் சுகத்தில் ஆழ்த்திவிடும். அவளுக்கு யாரிடமும் வித்தியாசம் பாராட்டி நடக்கவுந் தெரியாது, எல்லையற்ற இருட்கடலிலேதோன்றிய லட்சியதீபம் போலவும், புரந்த பாலைவனத்தின் நடுவிலே கிடந்த அமிர்தமயமான தடாகம்போலவும் அவர்களது ஆழ்ந்த துயர்நிலையில் அவள் ஒரு தன்னம்பிக்கையை உண்டுபண்ணிக் கொண்டிருந்தாள். அதாவது, வாழ்விலே சிரித்துப் பழக்கமில்லாத அந்த ஏழைகளை அவளுடைய ஒவ்வொரு செய்கையும் தங்களை மறந்து ஆரவாரஞ் செய்யும்படி உற்சாகமூட்டிக் கொண்டிருந்தது.

சில சமயங்களிலே அவள் ஒரு 'தர்பார்' நடத்துவதுண்டு. ஸ்வாமி முதன்முதல் அங்கே வந்த அன்றைக்கும் அது நடந்தது. எல்லோரும் அவளைச் சுற்றி உட்கார்ந்தார்கள். அவளுடைய கண்கள் நாலா பக்கமும் ஒருமுறை சுற்றி வந்தன. புதிதாக அன்றைக்கே வந்து சேர்ந்த ஸ்வாமியைக் கண்டதும், "ஓகோ! நமது கூட்டத்துக்குள் உத்தரவில்லாமலே யாரோ ஒரு புதியவன் வந்து நுழைந்துவிட்டதாகத் தெரிகிறதே! உடனே அந்த மனிதனைப் பிடித்துவந்து என்முன்னால் நிறுத்துங்கள்" என்ற கட்டளை பிறந்தது. ஸ்வாமி சிரிப்பை அடக்கிக்கொண்டு, 'நானே வந்துவிடுகிறேன்' என்று சொல்லிய

படி அவளுக்கு முன்னால் வந்து நின்றான்.

"வேண்டுமானால் உத்தரவில்லாமல் வந்து புகுந்த குற்றத்தை மன்னிக்கிறோம். ஆனால், மன்னிக்க முடியாத வேறொரு குற்றமுண்டு!"

"புதியவனானாலும் கட்டளைப்படி நடக்க உத்தரவை எதிர்பார்க்கிறேன்."

"நமது கூட்டத்துள் நுழைகிற எந்த ஆசாமியும் குறைந்தபட்சம் இரண்டு மூன்று கிழிசலில்லாத உடையை உடுத்திருக்கலாகாது. நீ அதற்கு மாறாக நடந்துவிட்டாய் அல்லவா? ஏன், நீங்களே சொல்லுங்கள், தண்டிக்காமல் விடலாமா?"

"விட முடியாது; விட முடியாது!" என்று ஏக காலத்தில் பல குரல்கள் எழுந்து கேட்டன. அவ்வளவில் அவன், "உங்களுடைய சட்டந் தெரியாமல் இந்த அபராதத்தைச் செய்துவிட்டேன். இதோ நானாகவே கிழித்துவிடுகிறேனே" என்று சொல்லியபடி கிழிப்பதற்குத் துணியைப் பிடித்தான். உடனே, "மன்னித்துக் கொண்டோம்; இனிமேல் இவ்விதமான பிழைகள் வராமற் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

அதோடு அன்றைய நியாய சபை கலைந்துவிட்டது. பிறகும் வெகு நேரம்வரை பேசிக்கொண்டிருந்துவிட்டு, ஒவ்வொருவராக அங்கங்கே விழுந்து தூங்கிவிட்டார்கள். ஸ்வாமி மட்டும் ஒருபுறத்திலே கிடந்து யோசித்துக்கொண்டிருந்தான். அவனுடைய உள்ளத்தில் என்றைக்குமே கண்டிராத ஒரு இன்ப வெள்ளம் கரைபுரண்டோடிக்கொண்டிருந்தது. அதனால் அன்று வெகு நேரத்தின் பிறகே அவனுக்கு நித்திரையும் வந்தது. தினமும் அவர்களுடைய வாழ்வு இப்படியே இருந்ததால், நாளைக்கு என்ற விசாரம் யாரிடமும் இருந்ததில்லை. உணவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒரே மாதிரியே சலனமற்ற நிலையிற் காணப்பட்டார்கள். எந்த நிலையிலும் தங்களைத் தேற்றிக்கொள்ளக் கூடிய ஒரு வீரம், அவர்களது பிறப்புரிமையானது என்று கூடச் சொல்லலாம். எல்லோராலும் ஒதுக்கித் தள்ளப்பட்டபோதிலும், அவர்களிடம் தன்னம்பிக்கையிருந்தது. மானமற்றவனைப் பிச்சைத் தொழிலையே செய்தாலும், அவர்களே அந்த மானத்தின் உயிர்நிலையாக இருந்தார்கள் எனலாம். வாழ்க்கையின் சுகங்களைக் கனவிலும் காணாமல் துன்பச் சுழல்களில் அடியுண்டும், நிமிர்ந்து நிற்கும் அவர்களைப்போன்ற மனிதரது மூச்சிலிருந்தே புது யுகத்தின் உயிர் தோன்றப் போகிறதல்லவா?

○

இந்த இடத்தில் ஏற்பட்ட கூட்டுறவை ஸ்வாமி தனக்குக் கிடைத்த ஒரு பாக்கியமாகவே கருதினான். மற்றவர்களைவிட அவனுக்கு உயர்ந்த ஒரு அந்தஸ்து கிடைத்தது. அதுவும் அவனுடைய கடாட்சத்தினாலேயே

கிடைத்ததென்று சொல்லவேண்டும். வாழ்க்கை என்னும் முள் நிறைந்த பாதையிலே காலமெல்லாம் நடந்ததில் சலிப்படைந்த அவனுக்கு அவள் ஒரு மருந்தாகவே விளங்கினாள். ஒருநாள் அவர்களது சம்பாஷணைக்குள் இந்தப் பிச்சையெடுக்கிற தொழிலைப்பற்றிய பேச்சும் வந்தது. அப்போது அவள் தன் மனத்தில் வெகு காலமாக வேரூன்றியிருந்த இந்த அபிப்பிராயத்தையும் சொன்னாள்:

"வெட்கமின்றி எல்லோரிடமும் யாசிக்கிறோம். வயிற்றுக் கொடுமையினாலேயே கேட்கிறார்கள் என்று எண்ணாமல் ஜனங்களும் வாய்க்கு வந்தபடி திட்டுகிறார்கள். கடவுள் தந்த உடம்பு இருக்கும்போதாவது வேலை செய்து இந்த வயிற்றை நிரப்பக் கூடாதா என்று அடிக்கடி தோன்றுகிறது".

சிறிது நேரம்வரை சும்மா இருந்துவிட்டே அவன் பதில் சொன்னான்.

"நீ சொன்னதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். உண்மையில் அது நல்லதுதான். ஆனால்...... எல்லோருக்கும் வேலை கிடைப்பது, பிறகு வேலைக்குக் கூலி கிடைப்பது — இவையெல்லாம் எனக்குப் பெரிய பிரச்சினைகளாகவே தோன்றுகின்றன."

அவள் இதைக் கேட்டதும் ஒரு மாதிரிச் சிரித்துக்கொண்டு "நீங்களும் ஒரு பெரிய கோழை என்றே சொல்வேன்; ஆனால், உங்களைப் பார்க்கும்போது அப்படிச் சொல்ல முடியவில்லை" என்றாள்.

"அனுபவமில்லாத ஒரு பெண் சொல்லக்கூடியதைத்தான் நீயும் சொல்லுகிறாய்"

"என்ன? உலகத்தில் வேலை கிடைப்பதென்பது பெரிய பிரச்சினையா? நன்றாகச் செய்கிறவர்களை எல்லோருமே வரவேற்கத் தயாராக இருக்கிறார்கள்."

"சரி; நான் இன்றையிலிருந்து அப்படியே செய்கிறேன். ஆனால் நீ......"

"நானும் அப்படித்தான் செய்வேன்."

"அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்."

"அப்படியானால் நான் நெடுகிலுமே பிச்சைதான் எடுக்க வேண்டுமாக்கும்?"

"எனக்குக் கிடைப்பதில் ஒரு பகுதியைக் கொடுக்கிறேனே!"

அவனைப்பற்றி நன்றாகத்தெரிந்திருந்தும், இதைக் கேட்டவுடன் கொஞ்சம் யோசித்துவிட்டே, "என்ன?" என்று கேட்டாள்.

"நான் வெகு காலமாகக் கூலி வேலை செய்து சீவித்த ஒருவன் என்பதை நீ ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். முதலாளிகள் என்று இருக்கிறவர்கள், ஓயாமல் வேலை வாங்கிக்கொண்டும், அதற்குரிய சம்பளத்தைக் கொடுப்பார்களா? மனிதனிடம் நியாயப்படி கொடுக்கிற மனமிருந்தால் ஒருவனும் கோடீஸ்வரனாய் வந்திருக்க முடியாது. பத்து ரூபா செலவு செய்யவேண்டிய ஒரு வேலையை, பத்துப் பணத்தோடு செய்கிற ஒருவனையே ஒவ்வொரு

மனிதனும் தேடிக்கொண்டிருக்கிறனென்பதை நீ அறிவாயா? அந்தக் காலத்தில் வேலை செய்து செய்து எலும்பாகிச் சாகிற நிலைக்கு வந்துவிட்டேன். பிறகு, வேலை செய்யவும் முடியாதுபோய் விடவே இந்தப் பிச்சையெடுக்கிற தொழிலிலிறங்கினேன். என்னுடைய இந்த அனுபவத்தைக் கொண்டே 'நீ செய்ய வேண்டாம்' என்று தடுத்தேன். உன்னாலும் அப்படிப் பாடுபட முடியாது."

"எப்படியிருந்தாலும், ஒவ்வொருவரும் தங்கள் வயிற்றுக்குத் தாங்கள்தானே பாடுபட்டுத் தீர வேண்டும்?"

"உண்மைதான்; ஆனல், ஒரு குழந்தை தன் சாப்பாட்டுக்குச் சம்பாதித்தே யாக வேண்டுமென்று, அதன் தாய் — எவ்வளவு ஏழையானாலும் — விரும்புவாளா?"

அவளுக்கு இந்த வார்த்தைகள் ஒருவித இன்பங் கலந்த மயக்கத்தையே உண்டுபண்ணின. ஆயினும், சாதுரியமாகப் பதில் சொன்னாள்.

"தானே பாடுபட்டுக் கொடுக்கும் பருவம் வந்தபிறகும், வாழ்க்கையிலே அடிபட்டுச் சோர்ந்து போன ஒரு தாயிடம் எதிர்பார்ப்பது எந்தப் பிள்ளைக்கும் ஏற்றதல்ல. அல்லாமலும், தன் குழந்தைக்கு சம்பாதிக்கத் தக்க பருவம் வந்த பிறகும், அடைத்து வைக்கிற ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்கே பெரிய தீமைசெய்தவளாகிறாள்."

"நியாயம் வேறு; தாயினுடைய உள்ளம் வேறு. அது சட்டங்களுக்குள் கட்டுப்படக்கூடியதுமல்ல."

மேலே அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. உண்மையான அன்புகனிந்த அவனது முகத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதிலேகூட அவள் ஆனந்தமடைந்தாள். இதுவரை காணாத ஒன்றைக் கண்டதுபோல அவளுடைய உள்ளம் உள்ளே குமுறிக்கொண்டிருந்தது. பாவம் அவளுக்குத் தன் தாயின் அன்பு கூட இப்படித்தான் இருக்குமென்று தெரியாது. அதனாலே தான் புதிதாகக் கிடைத்த இந்த இனிமை அவளுக்கு அமிர்த மயமாகவே தெரிந்தது. அவனும் உள்ளபடி ஒரு தாயின் ஸ்தானத்திலிருந்துகொண்டே தன் உள்ளத்தைக் காட்டினான். ஆயினும் அது இன்ன பாதையிலேதான் ஓடி வருகிறதென்று அவளால் நிதானிக்க முடியவில்லை.

○

இயற்கையிலே துள்ளிவிளையாடுஞ் சிறுவர்கள்போன்ற அவளுடைய சுபாவம் நாளடைவில் அடங்கிவிட, ஒருவித அமைதியான நிலை தானாகவே தோன்றி நிலைத்துவிட்டது. அவளிடத்துத் தோன்றிய இந்த மாறுதல் மற்றவர்களுக்குக்கூட ஆச்சரியத்தையே உண்டுபண்ணியது. அந்தக் கிழவன்மட்டும் "அம்மா, நீ அவனோடு சுகமாக வாழ்வதைப் பார்த்துவிட்டுத்தான் நான் சாக வேண்டும்" என்று அடிக்கடி

வெளியாகத் திறந்து சொல்லு வான், முதலில் "தாத்தா! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று கேட்டவள், வர வரச் சிரித்து மௌனமானாள். நியாயமின்றி மற்றவர்கள் இப்படி நினைக்கின்றார்கள் என்பது தெரிந்திருந்தும், அதை வரவேற்பதற்குத் தயாராகவே அவளுடைய நெஞ்சு திருந்திவிட்டது. ஆனால் ........? காலக்காற்று திடீரென்று வேறு திசை நோக்கிச் சுழன்றடிக்கத் தொடங்கிவிட்டது. ஒரு காரணமுமின்றி அவளுக்கு ஏதோ ஒன்று சொல்ல முடியாதபடி வந்துவிட்டது. இத்தனை நாளும் வெயிலென்றும் மழையென்றும் பாராமல் அலைந்தபோதுகூட வராத அந்த வரத்து, ஒருவன் பக்குவஞ் செய்ய வந்த பிறகே எங்கிருந்தோ ஓடிவந்து பிடித்துக்கொண்டது. ஏன், சாயந்தரம் அவன் அரிசிக்காகப் போகும்வரைக்கும் சௌக்கியமாகத்தானே யிருந்தாள்! படுத்தபடி கிடந்தபோதிலும் வேடிக்கையாகப் பேசினாள்; சிரித்தாள். 'கஞ்சி வைத்துத் தரட்டுமா' என்று கேட்டபோது, "இந்த நேரத்தில் எங்கே அரிசி கிடைக்கப்போகிறது" என்று அவனுக்காகத் தன் அநுதாபத்தைக்கூடத் தெரிவித்தாளே! இப்போதோ......

○

**பி**ரக்ஞையற்றுக் கிடக்கும் அந்தப் பேதையின் தலையைத் தன் மடிமீது வைத்தபடியே அவனும் உணர்ச்சியற்ற நிலையிலே உட்கார்ந்திருந்தான். அப்பொழுதான் ஒவ்வொருவராக அவர்களது கூட்டத்தவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். வெளியில் நிறைந்திருந்த இருளின் எதிரொலிபோல எல்லோருடைய இதயங்களும் பயங்கரமாக இருண்டு கிடந்தன. ஆனால், அந்த இருளின் கோரமான சிரிப்புப்போலவே தூரத்திலே வந்துகொண்டிருந்த கல்யாண ஊர்வலத்தில் தீபங்கள் பிரகாசித்தன. வாத்தியங்களின் ஓசையும் சனங்களின் ஆரவாரமும் ஒன்றாகி, விதி தூரத்தில் நின்றுகொண்டு தன் வாயைத் திறந்து ஊளையிடுவதுபோலவே கேட்டது.

மூச்சு நின்றபிறகும் அவளுடைய உடலைத் தன் மடியிலிருந்து இறக்கி வைக்க விரும்பாதவன் போலவே ஸ்வாமி விறைத்துப் போயிருந்தான். அவனுடைய கண்களிலிருந்து ஆறாக ஒழுகிய நீர் உயிரற்ற அவள் முகத்தின் வழியாக ஓடிக்கொண்டிருந்தது.

**க**ல்யாண ஊர்வலம் அந்த மரத்தடிக்குச் சற்றுத் தொலைவில் வந்ததும், திடீரென்று ஒரு பரபரப்பு உண்டாகிவிட்டது. எல்லோரும் நின்று ஒருவரோடொருவர் ஏதோ பேசிக்கொண்டார்கள். பிறகு ஒரேயொரு மனிதன் மட்டும் அந்த இடத்தை நோக்கி வந்தான். அவனுடைய உடம்பு ஆத்திரத்தினால் ஆடிக்கொண்டிருந்தது, அந்த மங்கிய மரநிழலிலேகூடத் தெரிந்தது. வார்த்தைகளும் துடித்துக்கொண்டே வெளி வந்தன; ஆனால், எட்டி நின்று பேசினான்.

'யாரெடா அங்கே! ஊர்வலம் வருவது தெரியவில்லையா? எப்படித் தெரியும்! எந்த நாயின் பிணத்தை வைத்துக்கொண்டு வழியிலே அபசகுனம்மாகிரி நிற்கிறீர்கள்? எல்லோருக்கும் அந்தக் கதி வரமுன் இழுத்துக் கொண்டு ஓடிப் போகிறீர்களா அல்லது.........''

ஸ்வாமி அப்படி இரைந்து கொண்டுநின்ற அந்த மிருகத்தின் பக்கமாக ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டுத் தன் உயிரினுமினிய அவளது உடலைத் தூக்கித் தோள்மீது வைத்துக்கொண்டு ஏதோ ஒரு திசையை நோக்கி நடந்தான். அவனைச் சேர்ந்த மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராக அவனைத் தொடர்ந்து நடந்தார்கள்.

அந்த உயர்வான மனித ஜாதியின் ஆடம்பரமான கல்யாண ஊர்வலம் நகரத் தொடங்கிய போது, அவர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட அந்த ஏழை மனிதர்களின் அபசகுனமான மரண ஊர்வலமும் இருளோடு ஐக்கியப் பட்டு மறைந்துவிட்டது.

ஒருவேளை நவயுகத்தைச் சிருஷ்டிக்க எண்ணிய விதியின் ஆரம்ப ஊர்வலங்களாகவும் இவை இருக்கலாமல்லவா?

---

## வரப்பெற்ரும்.

**பாரதி:** மாத வெளியீடு. கூட்டாசிரியர்கள்: கே. ராமநாதன்; கே. கணேஸ். காரியாலயம்: 'நிஷாத்' ஞேட்ணி பிளேஸ், கொட்டா ரோட், கொழும்பு.

---

**மறுமலர்ச்சி**

மாத வெளியீடு.

வருட சந்தா ரூபா **3.50**

தனிப் பிரதி சதம் **30**

எல்லா இடங்களிலும்
ஏஜன்டுகள் தேவை.

மனேஜர்,
மறுமலர்ச்சி,
288, ஆஸ்பத்திரி ரோட்,
யாழ்ப்பாணம்.

**அடுத்த இதழில்**

எழுதுகிறார்கள்:

பி. கோதண்டராமன் M. A.

அ. வி. மயில்வாகனன் B. A.

க. இ. சரவணமுத்து

'மஹாரசவி'

'இலங்கையர்கோன்'

வரதர்

---

# நண்டின் வாழ்க்கை நலம்

பொ. கிருஷ்ணன்.

மனிதன் மண்ணாசைகொண்டு உலகப்பரப்பு முழுவதை யுமே தன் ஆட்சிக்குட்படுத்த விரும்புகின்றான். அதன்மேலும் சந்திர செவ்வாய் மண்டலங்களிலும் தன் ஆணையைச் செலுத்த அவாவுறுகிறான். வெற்றிகொண்ட வல்லரசுகளின் கீழ்ச் சிற்றரசு கள் அடங்கி ஒடுங்குகின்றன.

போர் தொடங்கும்போதும் முடியும்போதும் சுதந்திரம் சுதந்திரம் எனப் பேரிரைச்சலிட்டு எத்தனையோ சாசனங்களை மனிதன் ஆக்குகிறான். பாவம்! அவையெல்லாம் மரண சாசனங் களாகுகின்றன. 'நீர்மேல் எழுத்திற்கு நேர்' என்ற அருமை வாக் கியத்துக்குகந்த உதாரணங்களாக இச் சாசனங்கள் விளங்கு கின்றன.

நல்ல உணவு உண்டு மனிதனுக்கு வருடங்கள் பலவாகின் றன. இதற்கிடையே மீண்டும் அணுக்குண்டை நம்மேற் போடு வதுபோல் அரசியல் மேதாவிகள், 'கொடும் பஞ்சம் நம்மிடங் கடுகி வருகிறது' என எச்சரிக்கை செய்கிறார்கள். உலகிலே அமைதி யில்லை. சஞ்சலமே உலக சுபாவமாய்விட்டது.

போரின் குமுறலும் பசியின் அலறலும் ஏற்படுத்தும் பல பொல்லாக் கிலேசங்களைச் சிறிதுநேரம் மறக்க ஒரு புலவர் தீட் டிக் காட்டும் புத்துலகிற்குச் சற்றே செல்வோம். புலவர் பல நூற்றாண்டுகளுக்கு முன் காட்டிய உலகிடை எல்லா நலங்களும் பொலிகின்றன.

இயற்கையன்னையின் மடித்தலத்தே ஜீவராசிகள் உலாவி எவ் வித குறைவுமின்றித் தீங்கொழிந்து நிறைவுடன் உறைகின்றன. அந்தப் பழங்காலத்தே மனித தேவைகள் மிக அற்பம். இயற்கை வளங்கொழிக்கும் தோட்டப் பாகமொன்றில் இரு நண்டுகள் நடாத்தும் இல்லறச் சிறப்பைப் புலவர் தாமுங் கண்டு ஆனந் தித்து நமக்குங் காட்டுகிறார். நீர்வளம் நிரம்பியுள்ள தோட்டப் பாகத்தின் எல்லையிற் பச்சிலைகள் செறிந்து பல பலாமரங்கள் வளருகின்றன. பலா வரிசை ஒரே இலைக் காடாகக் காட்சியளிக் கிறது. அத்தகைய பலாக்களைப் புலவர் 'அள்ளிலைப்பலா' (செறிந்த இலையையுடைய பலா) என நமக்கு அறிமுகப்படுத்து கிறார். அவற்றின் கனிகள் நெகிழ்ந்து சுளைகள் தேனொழுக நிலத் தில் வீழ்கின்றன. பலாவையடுத்து மரகதத் தகடுபோன்ற இலை களையுடைய வாழைகள் ஓங்கி வளருகின்றன. குலையிலேயே பழுத்

றுக் கனிந்து விழும் அவற்றின் கனிச் சுவையுடன் தமிழ்ச் சுவையையும் சேர்த்துப் புலவர் 'கனிந்துவீழ் வாழையின் பழன்' என எமது மனக்கண்முன் காட்டுகிறார். மனிதவர்க்கத்தின் தேவைக்கு மிஞ்சிய அவ்விருவகைப் பழங்களையும் நிலத்திற் கண்ட ஆண் நண்டு ஆனந்தம் அடைகிறது. எத்தகைய உணவு கொள்ளினும் வெறுப்புறும் நிறை கர்ப்பந் தாங்கியுள்ள தனது பெடைக்கு அவற்றை உணவாக்க மிகுந்த பிரயாசத்தோடு கொண்டு செல்லுகிறது ஆண் நண்டு. வாழ்க்கைச் சுவையை நன்குணர்ந்து அனுபவிக்கும் பேறுபெற்ற அப் புள்ளி நண்டினை 'வாழ் அலவன்' என அடை கொடுத்து அழைக்கிறார் புலவர்பெருமான். புள்ளியோடு கூடிய உடலையுடைய இந்த நண்டு, வரியமைந்த மேனியையுடைய பெடையை நினைந்தபடியே விரைந்து செல்கிறது. அதன் இல்லக்கிழத்தி வாழும் பொந்தினை நமது புலவர் பெருமாளிகையாக்கிக் காட்டுகிறார். பளிங்குக் கல் பதித்த தளத்தினையுடைய மாளிகைக்கு எவ்விதத்திலும் தாழாதது அப் பொந்து. அதன் தளத்திற்குத்தான் அத்தகைய பளபளப்பும் அழுத்தமும் எங்கிருந்து வந்தன என அதிசயிக்கிறோம். வெண்ணிறச் சங்கும் அழுத்தமான ஆமையோடுமே அத் தளம் அங்ஙனம் தோற்ற மளிக்கக் காரணமாயிருக்கின்றன. ஆண் நண்டு இங்ஙனம் மாளிகைத் தளம் அமைத்ததோடு திருப்தியுறவில்லை. தன் மனைவி வெளிப்புறத்தே வந்து உலாவும்போது கரடுமுரடான நிலப்பாகத்திலே நடக்க நேர்வதை விரும்பாத நாயகன், தன் அன்பு மிகுதியாலே தரையெலாம் மெத்தை பரப்புகின்றான். மனைவியின் உடல் குலுங்கின் அது அவளுக்கு எத்துணை துன்பங் கொடுக்கும்! அதன் வயிற்றுட் கிடக்கும் சிசுவிற்குத்தான் அது எவ்வளவு தொந்தரவாகும்! இந்த எண்ணத்தால் அந்த ஆண் நண்டு படர் கொடிகள் ஈன்ற மெல்லிதழ்ப் பூக்களை கறுக்கி வழிவழியே வீழ்த்தி நிலத்தினை மெத்தை பதித்த தளமாக்கி, நாயகி மெல்லென உலாப்போதற்கு உகந்ததாக்குகிறது.

இயற்கை நயத்தோடு இல்வாழ்க்கை நலமும் கலந்திலங்கும் நாட்டுக் காட்சியைத் திருத்தக்க தேவர் சுவைமிக்க சொற்களாலமைத்து இவ்வாறு காட்டுகிறார்:—

"அள்ளிலைப் பலவி னளிந்துவீழ் சுளையுங் கனிந்துவீழ் வாழையின் பழனும்
புள்ளிவா ழலவன் பொறிவரிக் கமஞ்சூன் ஞெண்டினுக் குய்த்துநோய் தணிப்பான்
பள்ளிவாய் நந்து மாமையும் பணித்துப் பன்மலர் வழிபடக் குறைக்கும்
வெள்ளநீர்ப் படப்பை விதையம்வந் தடைந்தே வேந்தனுக் குணர்த்தமுன் விடுத்தார்"

---

'மறுமலர்ச்சி'யில் உள்ள கதை கட்டுரைகளிற் காணப்படும் பெயர்கள் எதாவது நிஜம்போலத் தோன்றுகிறதா? — ஓ, அது தவறு! அவையெல்லாம் நமது கதாசிரியர்களின் திறமையான கற்பனைகள்தான்.

# புதிய

# இலக்கிய வெளியீடுகள்.

| | ரூ. ச. |
|---|---|
| கதைக் கோவை தொகுதி II. | 7.00 |
| கதைக் கோவை தொகுதி III. | 7,50 |
| கதைக் கோவை தொகுதி IV. | 10.50 |
| புயல் — 'தாகூர்' | 5.00 |
| இரு துருவங்கள்-'காண்டேகர்' | 5.50 |
| எரி நட்சத்திரம்-'காண்டேகர்' | 4.00 |
| என் சரித்திரம் — மகாத்மா காந்தி | 3.50 |

### எஸ். வி. வி. எழுதியவை

| | |
|---|---|
| ஸம்பத்து | 4.00 |
| உல்லாச வேளை | 3.50 |
| வஸந்தன் | 2 00 |
| புதுமாட்டுப் பெண் | 1.15 |

---

| | |
|---|---|
| தேவி சௌது ராணி 'பங்கிம் சந்திரர்' | 2.00 |
| தேவதாஸ் 'சரத் சந்திரர்' | 2.50 |
| அமூல்யன்-சரத்சந்திரர் | 1.25 |
| கங்கை கொண்ட சோழன் | 1.50 |

| | ரூ. ச. |
|---|---|
| பல்லவ மகேந்திர வர்மன் | 1.25 |
| மல்லிகை மாலை | 2.50 |
| உரிமையும் கடமையும் | 2.00 |
| கரட்டூர் ராமு | 2.00 |
| நீலமணி | 2.50 |
| சந்தனக் காவடி | 2.00 |
| வாடா விளக்கு | 2,00 |
| குழந்தையின் மனம் | 2.00 |
| பிள்ளை வரம் | 2,00 |
| தேவகி | 2.00 |
| தோட்டியை மணந்த அரச குமாரி | 2.00 |
| தாசிப் பெண் | 1.75 |
| மீராபாய் | 1.00 |
| மீராபாய் [நாடகம்] | 1.25 |
| ஜான்ஸி ராணி-லக்ஷ்மீபாய் | 30 |
| இளமைப் பருவம் | 1.50 |
| சதுரங்கம் | 1.75 |
| கல்லின் வேட்கை | 2.00 |
| தாவரங்களின் இல்லறம் —'ராஜாஜி' | 1.50 |
| சிசு பாலனம்—'ராஜாஜி' | 50 |
| பாராயணத் திருப்புகழ் | 25 |

## இலங்கையில் விற்பனை உரிமையாளர்கள்:

## S. S. சண்முகநாதன் அன் சன்ஸ்,

வண்ணார்பண்ணை ... யாழ்ப்பாணம்.

*Published for The Tamil Literary Renaissance Society, Jaffna.*

'பாரத்' ஸ்ருடியோ

147, செம்மாதெரு, :: யாழ்ப்பாணம்.

சகலவிதமான

○ போட்டோ வேலைகள்

○ சினிமா ஸ்லைடுகள்

முதலியவைகளுக்கு

* புகழ்பெற்ற ஸ்தாபனம் *

**BHARAT STUDIO,**

147, Chemma Street, JAFFNA.

*Prop:* M. SIVASUBRAMANIAM

(IYATHAMBY)

இலங்கையில் முதலாவதும் முதன்மையானதுமான

●

விநாயகமூர்த்தி ஆச்சாரி

விக்கிரகத் தொழிற்சாலை.

●

145, செம்மாதெரு,

யாழ்ப்பாணம்.

●

*Prop:* சில்பாசாரிய, ரேவதீ V. N. குப்புஸ்வாமி.

VISIT

DAYARAM'S

FOR

EVERYTHING IN

TEXTILES

SILKS SAREES

DRESS MATERIALS

ALSO

ALL TYPES OF

GROCERIES.

54, MAIN STREET, — JAFFNA.

Publisher : K. S. Natarajan.
Printed at Sri Parwathi Press,
288, Hospital Road, Jaffna.

Editors :
A. S. Muruganandan
T. S. Varatharajan